**பேலியகொட மத்திய மீன் சந்தை கட்டிடத்தொகுதி முகாமைத்துவ நம்பிக்கைப் பொறு - 2018**

---

**1.1 <u>மறுப்பு அபிப்பிராயம்</u>**

பேலியகொட மத்திய மீன் சந்தை கட்டிடத்தொகுதி முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நம்பிக்கைப் பொறுப்பின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பராயமொன்றை தெரிவிக்கவில்லை. எனது அறிக்கையின் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன்.

**1.2 <u>மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை</u>**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 <u>நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்</u>**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நம்பிக்கைப் பொறுப்பின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது அதிகாரசபை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நம்பிக்கைப் பொறுப்பின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நம்பிக்கைப் பொறுப்பின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 <u>நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்</u>

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் தொடர்பில் தாக்கமொன்று ஏற்படக்கூடுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வது எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக நிறுவனத்தின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவனத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவனத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என

நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எனது தீர்மானங்கள் கணக்காய்வாளரின் அறிக்கை திகதி வரை பெற்றுக்கொண்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையிலாகும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிறுவகம் செயற்படுகின்றதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்கள் முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வதற்கு போதியளவு “முறையாக திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துச் செல்வது அவசியமாகவுள்ளது.

**1.5.2 <u>இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை</u>**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | குறித்த நியமங்களுடன் தொடர்பான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நியமம் 02 இன் 18 ஆம் பந்தியின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதியாண்டின் பெறுவனவு மற்றும் கொடுப்பனவு தொடர்பான விபரங்கள் இதனுடன் சமர்ப்பிக்கப்படுகின்றது. | நியமத்தின் 01 இன் பிரகாரம் காசுப் பாய்ச்சல் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நியமம் 07 இன் 57 ஆம் பந்திக்கு முரணாக ரூபா 38,598,438 மொத்தக் கிரயமான சுத்திகரிப்பு இயந்திரகூடத்தின் இயந்திரங்கள் மற்றும் கட்டிடங்கள் வெவ்வேறாக இனங்காணாமல் 5 சதவீதப் படி பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தது. | பேலியகொட வியாபார கட்டிடத்தொகுதியின் சுத்திகரிப்பு இயந்திர கூடத்தின் இயந்திரங்கள் மற்றும் கட்டிடங்கள் வெவ்வேறாக இனங்காண்பது சிரமமாகும். அது தொடர்பாக தகைமையுடைய ஒருவர் காணப்படவில்லை. | நியமத்தின் பிரகாரம் கட்டிடங்கள் மற்றும் இயந்திரங்கள் வெவ்வேறாக இனங்காணப்பட்டு பெறுமானத்தேய்வு செய்யப்பட வேண்டும். |
| (இ) | நியமம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கு பயன்படு ஆயுட்காலம் வருடாந்தம் மதிப்பீடு செய்யப்படாத காரணத்தினால் ரூபா 2,412,124 கிரயத்திலான 3 நிலையான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதும் மேலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. எவ்வாறாயினும் அச்சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் 2017 ஆம் ஆண்டின் போது மீள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அச்சொத்துக்கள் தகைமையுடைய ஒருவராலேயே மீள் மதிப்பீடு செய்யப்பட்டது. ஆயுட்காலத்தை அடிப்படையாகக் கொண்டு பெறுமானத்தேய்வு சதவீதம் தீர்மானிக்கப்பட்டது. | நியமத்தின் பிரகாரம் நடைமுறையல்லாத சொத்துக்களுக்காக பயன்படு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்து மீள் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் நிலையான வைப்பு வட்டி ரூபா 19,435,713 இற்குரிய செலுத்த வேண்டிய நிறுத்திவைத்தல் வரியாக ரூபா 125,958 கூடுதலாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2018 ஆம் ஆண்டிற்கான நிலையான வைப்பு வட்டி வமான் ரூபா 21,949,879 ஆக இருந்ததுடன் அது 5 சதவீதமாக கணக்கிடப்பட்டு நிறுத்தி வைத்தல் வரியாக காட்டப்பட்டுள்ளது. | மீளாய்வாண்டிற்கான நிலையான வைப்பு வட்டி சரியாக இனங்கண்டு அதன் அடிப்படையில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது வைப்புச் செய்யப்பட்டிருந்த போதும் வங்கிக் கணக்கிற்கு செலவு வைக்கப்படாதிருந்த இரண்டு கடைகளுக்காக குத்தகை வாடகை வருமானம் முறையே ரூபா 80,000 மற்றும் ரூபா 617,038 தொகை தீர்வு செய்யப்படாமல் மீளாய்வாண்டின் போது வங்கிக் கணக்கிணக்க கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | எதிர்ாலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக | வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருந்த பணத்தை இனங்கண்டு தாமதமின்றி வங்கிக் கணக்கிற்கு செலவு வைப்பதற்கும் கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | குளிர்ச்சாலை மற்றும் கட்டி ஐஸ் இயந்திரகூடத்தின் குத்தகை உடன்படிக்கை மீறப்பட்ட காரணத்தினால் அறவிடப்பட வேண்டிய ரூபா 2,467,500 தொகை கணக்கீடுசெய்வதற்கும் அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அந்நிறுவனம் தொடர்பாக மேலும் தகவல்கள் பெற்றுக்கொள்வதற்காக கம்பனி பதிவாளர் ஆணையாளருக்கு கடித மொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் உரிய தகவல்கள் கிடைத்ததன் பின்னர் நிலுவை தொகையை அறவிடுவதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது. | நிலுவை பணத்தை அறவிடுவதற்கும் கிடைக்க வேண்டிய குத்தகை வருமான மொன்றாக கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் குத்தகை வருமானம் மற்றும் கிடைக்க வேண்டிய வாடகை வருமானம் ரூபா 66,000 குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கையின் பிரகாரம் வருடாந்த வாடகை வருமானம் கணக்கிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

**1.5.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | விடயம் | நிதிக்கூற்றுக் களின் பிரகாரம் பெறுமதி | அண்மித்த அறிக்கை களின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | | |
| (அ) | 8 பேரேட்டுக் கணக்குகள் | 1,337,146,047 | 1,376,336,695 | 39,190,648 | நம்பிக்கை பொறுப்பினால் பேணிச்செல்லப்படும் பேரேட்டில் குறிப்பிடப்பட்ட மீதி சரியானதல்ல. எனினும் பரீட்சை மீதி சரியாக தயாரிக்கப்பட்டுள்ளது. | சரியாக பேரேட்டு கணக்குகள் தயாரிக்கப்பட்டு அதன் ிரகாரம் பரீட்சை மீதி தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (ஆ) | 12 பேரேட்டுக் கணக்குகள் | 382,326,642 | 344,736,524 | 37,590,118 | நம்பிக்கை பொறுப்பினால் பேணிச் செல்லப்படும் பேரேட்டில் குறிப்பிடப்பட்ட மீதி சரியானதல்ல. எனினும் பரீட்சை மீதி சரியாக தயாரிக்கப்பட்டுள்ளது. | சரியாக பேரேட்டு கணக்குகள் தயாரிக்கப்பட்டு அதன் ிரகாரம் பரீட்சை மீதி தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | 8 பேரேட்டுக் கணக்குகள் | 0 | 155,034,055 | 155,034,055 | நம்பிக்கை பொறுப்பினால் பேணிச்செல்லப்படும் பேரேட்டில் குறிப்பிடப்பட்ட மீதி சரியானதல்ல. எனினும் பரீட்சை மீதி சரியாக தயாரிக்கப்பட்டுள்ளது. | சரியாக பேரேட்டு கணக்குகள் தயாரிக்கப்பட்டு அதன் ிரகாரம் பரீட்சை மீதி தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.5.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

-------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| விடயம் | | தொகை ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | கட்டிடங்கள் | 1,288,187,598 | கட்டிடங்கள் வெவ்வேறாக இனங்காண்பதற்குரிய தகவல்கள் | கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | நிலையான சொத்துக்கள் வேறாக இனங்காணப்படக் கூடிய வகையில் தகவல்கள் பேணப்பட வேண்டும். |
| (ஆ) | தற்காலிகமாக மீள் செலுத்த வேண்டிய வைப்பு மீதிகள் | 5,550,000 | மீதி உறுதிப்படுத்தல்கள் | பேரேட்டுக் கணக்கில் விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | மீதி உறுதிப்படுத்தும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | செலவினம் | 1,455,790 | 04 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் | ரூபா 540,540 தொகையான உறுதிச்சீட்டு சமர்ப்பிக்கப்படவில்லை. எவ்வாறாயினும் அவ்வாறு சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் அனைத்தும் இந்த ஒப்பந்தத்திற்குரிய பெறுகை கோவையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் 272(3) இன் பிரகாரம் கொடுப்பனவு உறுதிச்சீட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஈ) | கடன்கொடுத்தோர் மீதிகள் | 972,951 | மீதி உறுதிப்படுத்தல் | பேரேட்டுக் கணக்கில் விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | கடன்கொடுத்தோர் மீதிகள் சரியானதென உறுதிப்படுத்தும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (உ) | சில்லறைக் காசுக் கொடுப்பனவு | 996,418 | பட்டியல்கள் | அதற்குரிய சகல விபரங்களும் பெறுகை கோவையில் காணப்படுகின்றன | சில்லறைக் காசினால் மேற்கொண்ட கொடுப்பனவுகளுக்குரிய பட்டியல்கள் உறுதிச்சீட்டுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.**

---

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| i | நிதிப் பிரமாணம் 103(1) | பெறுமதி இனங்காணப்படாத ரூபா 121,470 ஆன மின்பிறப்பாக்கி இயந்திரத்தின் 4 பட்டறிகள் காணாமல் போனமை தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மின்பிறப்பாக்கி இயந்திரத்தின் 4 பட்டறிகள் காணாமல் போனதாக அறிந்து கொண்டதன் பின்னர் பேலியாகொடை பொலிசில் முறைப்பாடொன்று செய்யப்பட்டுள்ளதுடன் பொலிசினால் தற்போது புலனாய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | நிதிப்பிரமாணம் 103(i) இன் பிரகாரம் காணாமல் போனமைக்கு பொறுப்பானவர்களை உறுதிப்படுத்துவதற்கு பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. |
| ii | நிதிப் பிரமாணம் 104 | நம்பிக்கை பொறுப்பின் முன்னால் முகாமையாளர் பயன்பாட்டிற்கு எடுத்திருந்த செய்தி பரிமாற்ற இயந்திரமொன்று 2018 ஆம் | பேலியாகொடை பொலிசில் இது தொடர்பாக முறைப்பாடொன்று செய்யப்பட்டுள்ளதுடன் | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் ஆரம்ப பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆண்டின் இறுதியில் சேவையிலிருந்து விலகும் போது மீள ஒப்படைத்திருக்க வில்லை. அது தெதாடர்பாக 2019 ஆகஸ்ட் 13 ஆந் திகதி பேலியாகொடை பொலிசில் முறைப்பாடொன்று செய்யப்பட்டிருந்த போதும் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பரிசோதனை மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக புலனாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு புலனாய்வு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | |
| iii | நிதிப் பிரமாணம் 110 | சேதங்கள் தொடர்பான விபரங்களை பதிவு செய்வதற்கு பதிவேடொன்று பேணிச்செல்லப்பட்டிருக்க வில்லை. | அரச ஆதனங்களின் சேதங்கள் தொடர்பாக பதிவேடொன்றை பேணிச்செல்லுமாறு விடயத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் சேதங்கள் மற்றும் நட்டங்கள் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். |
| iv | நிதிப் பிரமாணம் 264 | 2,287,739 | ஒவ்வொரு கொள்வனவிற்குரிய பண பற்றுச்சீட்டுக்கள் மற்றும் அதற்குரிய அனைத்து விபரங்களும் பெறுகை கோவைகளில் காணப்படுகின்றன. படிகள் கொடுப்பனவு தொடர்பான விபரங்கள் அனைத்து பணப்பிரிவிடம் காணப்படுகின்றது. | பெறுவோருக்கு பணம் கிடைத்ததாக பற்றுச்சீட்டொன்று உறுதிச்சீட்டுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | நிலையான சொத்துக்கள் பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | நிலையான சொத்துக்கள் வெவ்வேறாக இனங்காணக்கூடிய வகையில் பதிவேடொன்று பேணப்பட பேணிச் செல்லப்பட வேண்டும். |
| (இ) | 2010 ஆகஸ்ட் 10 ஆந் திகதிய முகாமைத்துவ நம்பிக்கை பொறுப்பு ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் 6(அ) (1) பந்தி | பொறுப்பின் மிகைப் பணத்தை வேறு ஏதேனும் வகையில் முதலீடு செய்வதற்கு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு செயலாளர் மற்றும் திறைசேரியின் முன் இணக்கப்பாடு இல்லாமல் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை வரை ரூபா 200.6 மில்லியன் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | முகாமைத்துவத்தின் தீர்மானங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பொறுப்பு ஏற்படுத்தப்படுத்தம் போது ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் 6(அ)(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 21,507,832 ஆன நட்டமொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 18,620,437 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 2,887,395 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு நம்பிக்கை பொறுப்பின் பாதுகாப்பு செலவினம், நீர் பாவனை மற்றும் சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்பு செலவினம் அதிகரித்தமை பிரதான காரணங்களாக இருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவினங்களின் போக்கு பகுப்பாய்வு

| வருமான வழி | 2018 | 2017 | சதவீதம் நூற்றுக்கு | அவதானிப்பு |
|---|---|---|---|---|
| வாகன நிறுத்தல் கட்டண வருமானம் | 2,772,482 | - | 100 | கடற்றொழில் கூட்:டத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்ட வாகன நிறுத்தி வைத்தல் வருமானத்தை பெற்றுக்கொள்வது மீளாய்வாண்டில் நம்பிக்கை பொறுப்பிற்கு கிடைத்தமை |
| **செலவின போக்கு** | | | | |
| பாதுகாப்பு செலவினம் | 8,940,945 | 6,813,539 | 31 | பெறுகை செயற்பாடு பின்பற்றப்படாதிருந்தமை |
| நீர் செலவினம் | 7,629,040 | 5,076,189 | 50 | மீள் சுழற்சி செய்யப்படாத மீன் பாகங்களை அகற்றுவதற்காக நீரைப் பயன்படுத்தியமை |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மொத்த வியாபார வியாபாரிகளுக்கு கையளிக்கப் பட்டிருந்த கடைகளில் குத்தகை காலப்பகுதியில் அல்லது இறுதியின் போது மேலும் குத்தகை பெறுவோர் வியாபாரத்தை நடாத்திச் செல்லப்படவில்லையெனின் அது தொடர்பாக பரீட்சிக்கப்பட்டு நம்பிக்கை பொறுப்பிற்கு கையேற்கப்பட்டு பெறுகை வழிகாட்டல் பின்பற்றப்பட்டு கூறுவிலை கோரப்பட்டு மீண்டும் குத்தகைக்கு வழங்குவதற்கு நம்பிக்கை பொறுப்பினால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமல் 2018 ஆம் ஆண்டில் வெளித்தரப்பினருக்கு 6 மொத்த வியாபார நிலையங்கள் கையளிக்கப்பட்டு அதற்காக ரூபா 3,000,000 பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை அவ்வாறு கையளிக்கப்பட்டிருந்த கடைகளின் எண்ணிக்கை 20 ஆக இருந்ததுடன் 2016 இற்கு முன்னர் கையளிக்கப்பட்டிருந்த 26 கடைகளிலிருந்து எவ்வித பணமும் நம்பிக்கை பெறுப்பிற்கு பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | பெறுகை வழிகாட்டல் பின்பற்றப்பட்ட போதும் மொத்த வியாபார கூடத்தின் மாதாந்த குத்தகை தொகை மற்றும் மீண்டும் கொடுப்பனவு இவ்வாறான கையளிப்பு செயற்பாடுகள் இடை நடுவில் தரப்பினர்களால் வியாபார மொன்றாக நடாத்திச் செல்வதாக அறிக்கையிடப்பட்டிருந்தது. இவ்வாறான கையளிப்பினை மட்டுப்படுத்துவதற்காக 2018 ஆம் ஆண்டு முதல் அவ்வாறு கையளிக்கும் போது ரூபா 500,000 தொகை முகாமைத்துவ பொறுப்பிற்கு செலுத்த வேண்டுமென தீர்மானிக்கப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டல் பின்பற்றப்பட்டு கூறுவிலை கோரி மீண்டும் குத்தகைக்கு வழங்குவதற்கும் குத்தகை வாடகை நிர்ணயிக்கப்பட்டதன் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென |
| (ஆ) | வியாபார கட்டிடத் தொகுதி அமைந்துள்ள 3.1776 ஹெக்டேயர் பரப்பிலான காணி, காணி கையேற்றல் சட்டத்தின் கீழ் இலங்கை அரச பொறியியலாளர் கூட்டுத்தாபனத்திடம் இருந்த பெற்றுக் கொண்ட காணியை அமைச்சரவை தீர்மானத்தின் | பொறியியலாளர் கூட்டுத்தானத்திற்கு பணத்தை கொடுப்பனவு செய்து காணியின் உரித்தினைப் பெற்றுக்கொள்வதற்கு பொது திறைசேரியால் பணம் அங்கீகரிக்கப்படாமையால் அப் பணத்தை முகாமைத்துவ பொறுப்பினால் | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் வியாபார கடை தொகுதி அமைந்துள்ள காணி நம்பிக்கை பொறுப்பிற்கு கையேற்கப்பட வேண்டுமென |

| | | | |
|---|---|---|---|
| | பிரகாரம் அதனை நம்பிக்கை பொறுப்பிற்கு கையேற்பதற்கு மீளாய்வாண்டிலும் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் காணியின் உரித்து மாத்திரம் பொறுப்பில் காணப்பட்டது. | செலவிடுவதற்கு முடியாமையால் காணியின் உரித்து மாத்திரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. | |
| (இ) | வியாபார வளவில் மோட்டார் வாகன பிரிவின் வருமானத்தை சேகரிப்பதற்கு இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்துடன் தனியார் கம்பனியொன்று 2011 மார்ச் 07 ஆந் திகதி முதல் 10 ஆண்டுகள் வரையான காலப்பகுதிக்காக உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. அதில் 3.4 ஆம் பிரிவின் பிரகாரம் மாதாந்த தேறிய இலாபத்தில் 40 சதவீதம் இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்க வேண்டுமென குறிப்பிட்டிருந்த போதும் 2018 மே வரை அவ் வருமானத்தை நம்பிக்கை பொறுப்பிற்கு பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. மேலும் 2016 மே 17 ஆந் திகதிய முகாமைத்துவ பொறுப்பின் கூட்டத்தின் போது வாகன நிறுத்துமிட பிரிவிடமிருந்து கிடைக்க வேண்டிய வருமானம் 50 சதவீதமாக இருக்க வேண்டுமென தீர்மானிக்கப்பட்ட போதும் 2019 ஆகஸ்ட் வரையிலும் கடன் உடன்படிக்கை திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை. | விலகலை மாற்றி கம்பனிக்கு வருமானம் பகிரப்படும் விதத்தில் முடியுமான வரை திருத்தமொன்றை மேற்கொண்டு ஒப்பந்த உடன்படிக்கையில் உள்ளடக்கவும் முகாமைத்துவ நம்பிக்கை பொறுப்பினால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.<br><br>தற்போது காணப்படும் ஒப்பந்த உடன்படிக்கை பூர்த்தி செய்யும் சாத்தியவளம் தொடர்பாக முகாமைத்துவ பொறுப்பினால் சட்டமா அதிபர் திணைக்களத்திடமிருந்து ஆலோசனை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன் ஒப்பந்த உடன்படிக்கையின் நிபந்தனைகளின் பிரகாரம் குறித்த உடன்படிக்கையை முடிவுறுத்துதல் மிகவும் சிரமமான விடயமொன்றாக இருந்தது. | நம்பிக்கை பொறுப்பிடம் காணப்படும் சொத்துக்களிலிருந்து பொறுப்பிற்கு வருமானத்தை பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் உடன் படிக்கை திருத்தம் செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | 2017 ஆம் ஆண்டு முதல் இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் ஐஸ் கட்டிகளை வழங்கல் மேற்கொண்டிருந்த போதும் அவ் வருமானத்தில் எவ்வித கட்டணமொன்றும் நம்பிக்கை பொறுப்பு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அவ்வாறே 2018 செப்தெம்பர் வரையில் 6 மொத்த மீன் விற்பனைக் கூடங்கள், மீன் வெட்டும் கூடமொன்று, சில்லறை மீன் கடையொன்று மற்றும் 1 ஆம் இலக்க கட்டிடத்தின் கடை | இது தொடர்பான முகாமைத்துவ கூட்டங்களின் போது இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு தெரியப்படுத்தி நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதும் இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தில் தற்போது காணப்படும் நிதிப் பிரச்சினை காரணமாக இச் சந்தர்ப்பத்தில் அப் பணத்தை செலுத்துவது சிரமமாக உள்ளது. | இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தி டமிருந்து அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவிட வேண்டுமென. |

| | | | |
|---|---|---|---|
| | யொன்றின் ஒரு பகுதி என்பன இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்த போதும் அதற்காக எவ்வித கட்டணங்களும் அறவிடப்படாத காரணத்தினால் மாதமொன்றுக்கு ரூபா 80,000 அளவிலான வருமானமொன்று நம்பிக்கை பொறுப்பினால் இழக்கப்பட்டிருந்தது. மேலும் இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்திடமிருந்து 2018 சனவரி 01 இல் உள்ளவாறு அறவிடுவதற்கு இருந்த 17,402,787 தொகையும் மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (உ) | 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக சில்லறை பிரிவின் 64 மொத்த விற்பனை கூடங்களில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 18,232,333 ஆன நிலுவை வாடகை 2018 ஆம் ஆண்டில் அறவிடப்படாதிருக்கையில் அதற்கு இடையே 09 வியாபார நிலையங்களை மீண்டும் குத்தகைக்கு வழங்கல் மூலம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக இருந்த குத்தகை பணம் மேலும் ரூபா 950,000 ஆல் அதிகரித்திருந்தது. | 2011 ஆம் ஆண்டு முதல் சில்லறை பிரிவின் 64 மொத்த வியாபார நிலையங்களில் வியாபார செயற்பாடுகள் செயற்பாட்டு மட்டத்தில் காணப்படாததுடன் புதிய உரித்தாளர்களுக்கு வியாபார கூடங்களை வழங்கப்பட்ட போதும் இதுவரை சில்லறை பிரிவின் வியாபார செயற்பாடுகள் வெற்றிகரமாக காணப்படவில்லை. | நிலுவை பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென |

## 3.2 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாட்டிலான சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | வியாபார தொகுதியில் 154 மொத்த வியாபார நிலையங்களும் 128 சில்லறை வியாபார நிலையங்களும் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அதில் 64 வியாபார நிலையங்கள் ரூபா | மீன் விற்பனை நிலைய தொகுதியின் சில்லறை மீன் விற்பனை மிகவும் பலவீனமாக மட்டத்தில் காணப்படுவதால் இப் பிரிவின் விற்பனை கூடங்களினை குத்தகைக்கு எடுப்பதற்கு குத்தகையாளர்கள் | சில்லறை மீன் வியாபாரத்தை மேம்படுத்துவதற்கு தந்திரோபாயங்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 9,625,540 செலவு செய்து மொத்த வியாபார நிலையங்களாக மாற்றப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் 2019 செப்தெம்பர் 17 வரை சில்லறை பிரிவில் 3 வியாபார நிலையங்களும் மொத்த வியாபாரத்தில் 33 வியாபார நிலையங்களும் விற்பனை செயற்பாடு களுக்காக பயன்படுத்தப்படவில்லையென அவதானிக்கப்பட்டது. | முன்வராமல் இருப்பதுடன் விற்பனை கூடங்களை பெற்றுக்கொண்டவர்கள் கூட அவ்விடங்களில் வியாபாரத்தை மேற்கொள்வதில்லை. | |
| (ஆ) | 5 செய்தி பரிமாற்றல் உபகரணங்கள் ஓராண்டுக்கு மேற்பட்ட காலமாக பயன்பாட்டில் இல்லாமல் காணப்பட்ட போதும் அதற்கான மீளாய்வாண்டில் ரூபா 52,900 செலவிடப்பட்டு பட்டறிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமை. | இக் காலப்பகுதியில் நம்பிக்கை பொறுப்பின் முகாமையாளர் இயங்காத நிலையில் காணப்பட்ட செய்தி பரிமாற்று இயந்திரங்களை திருத்தம் செய்து பயன்படுத்துமாறு வேலை பரிசோதகருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத உபகரணங்களுக்கு மேலும் செலவினம் மேற்கொள்ளக்கூடாது. |

### 3.3 பெறுகை முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் இல. 2.4.1, 2.11.1, 3.4, 6.3.3, 7.7 மற்றும் 8.9.1 ஆம் வழிகாட்டிகள் பின்பற்றப்படாமல் மீளாய்வாண்டில் மீன் விற்பனை தொகுதி இல. 01 கட்டிடத்தின் உட்கூரையை திருத்தம் செய்யும் ரூபா 2,450,000 ஆன ஒப்பந்தமும் மொத்த பிரிவில் நிலத்தை திருத்தம் செய்வதற்கன ரூபா 2,366,000 ஆன ஒப்பந்தமும் குளிர்சாலை மற்றும் கட்டி ஐஸ் இயந்திரகூடம் ரூபா 525,000 ஆன மாதாந்த வாடகைக்கான குத்தகை ஒப்பந்தமும் 44 மீன் | • மஹர பிரதேச செயலகத்தில் அறிவித்தலொன்றை வெளியிடுவதற்கும் மேலதிகமாக கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சில் 2017 ஆம் ஆண்டிற்குரியதாக பதிவு செய்யப்பட்டிருந்த ஒப்பந்த நிறுவனங்களிற்கும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் இல. 2.4.1, 2.11.1, 3.4, 6.3.3, 7.7 மற்றும் 8.9.1 ஆம் வழிகாட்டிகள் பின்பற்றப்பட வேண்டுமென |

| | | | |
|---|---|---|---|
| | வெட்டுப் பலகைகள் ரூபா 1,320,000 இற்கான கொள்வனவு ஒப்பந்தமும் தனியார் துறைக்கு வழங்கப்பட்டிருந்தது. | • தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் அமைச்சு பெறுகைக் குழுவின் மூலம் குறித்த ஒப்பந்தத்தை வழங்குதல் பொருத்தமானதென குறிப்பிடப்பட்டிருந்தது.<br><br>• முதலாவது கேள்வி கோரலின் போது பயன்படுத்தப்பட்ட அளவிட்டு பத்திரத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகள் பல குறிப்பிடப்படாமை தொழில்நுட்ப தவறுகள் பல காணப்பட்டதால் கேள்விதாரரினால் பல வகைக்கு குறைந்த விலை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. பின்னர் கூடிய விலை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | |
| (ஆ) | பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.2 வழிகாட்டலின் பிரகாரம் நம்பிக்கை பொறுப்பிற்காக தேவையான பெறுகை செயற்பாடுகளின் பொறுப்பு அமைச்சின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு கையளிக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அறிக்கையில் குறித்த விடயங்கள் செயற்படுத்துவதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.2 வழிகாட்டலின் பிரகாரம் நம்பிக்கை பொறுப்பிற்காக தேவையான பெறுகை செயற்பாடுகளின் பொறுப்பு அமைச்சின் பொறுப்பில் கையேற்கப்பட வேண்டும். |

**3.4 மனித வள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வியாபார தொகுதியின் செயற்பாட்டு மற்றும் பராமரிப்பு நடவடிக்கை களுக்காக இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தினால் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் பதவியணியினரால் இனங் காணப்பட்ட உத்தியோகத்தர்கள் | நிறுவனத்தின் தேவைப்பாட்டின் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினதும் முகாமைத்துவ நம்பிக்கை பொறுப்பின் அங்கீகாரத்துடன் மேற்படி இரண்டு பதவி களுக்காக உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டது. | அமைச்சரவைத் தீர்மான அங்கீகாரத்தின் பிரகாரம் நம்பிக்கை பொறுப்பின் பதவிகளுக்காக உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டுமென. |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் ஊழியர்கள் மாத்திரம் முகாமைத்துவ நம்பிக்கை பொறுப்பின் பதவிகளுக்காக இணைக்கப்பட வேண்டுமென 2010 மே 26 ஆந் திகதிய அமைச்சரவை கூட்டத்தின் போது தீர்மானிக்கப் பட்டிருந்தது. எவ்வாறாயினும் முகாமையாளர் (தொழிற்பாட்டு பதவிகளுக்கு இரண்டு வெளிநபர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 1,193,373 கூட்டுத் தொகை சம்பளமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | நம்பிக்கை பொறுப்பின் முகாமையாளர் பிரதி கணக்காளர் பதவி மற்றும் உள்ளக கணக்காய்வாளர் பதவிகள் என்பவற்றுக்கான முறையான ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படாமை காரணமாக சரியான வருமானத்தை பெற்றுக் கொள்வதற்கும் சரியான நிதிக்கூற்றுக்களை தயாரித்து உரிய திகதிகளில் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கவும் முடியாமல் இருந்ததுடன் தொடர்ந்தும் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயமொன்றை வழங்க முடியாதிருந்தது. | நம்பிக்கை பொறுப்பின் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்பட்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட போதும் அது அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. முகாமையாளர் ஒருவர் மற்றும் கணக்காளர் ஒருவர் ஆகியோரை ஆட்சேர்க்கும் போது அந்த உத்தியோகத்தர்களுக்கு சம்பளக் கொடுப்பனவிற்காக மாதாந்தம் ரூபா மூன்று இலட்சத்திற்கு அண்மித்த தொகையொன்று செலவிட நேரும். அப் பதவிகளில் பதில் கடமை புரிவதற்காக ரூபா ஐம்பதாயிரம் மாத்திரம் செலவாகின்றது. | நம்பிக்கை பொறுப்பினை முறையாக பேணிச் செல்வதற்கு தேவையான வெற்றிடப் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்தல் இடம்பெற வேண்டும். |

**4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும் 2018 ஆம் ஆண்டின் வரைவு ஆண்டறிக்கை இல்லாமல் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு 2019 செப்தம்பர் 25 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | பதில் அளிக்கப்பட்டிருக்ககவில்லை. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் வரைவு ஆண்டறிக்கையுடன் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 4.2 கூட்டிணைந்த திட்டம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அபிவிருத்தி செயற்பாடுகள் மற்றும் வர்த்தக நடவடிக்கைகள் வெவ்வேறாக இனங்கண்டு நம்பிக்கை பொறுப்பினை ஸ்தாபித்த நோக்கங்களை நிறைவேற்று வதற்காக காணப்படும் பலங்கள், பலவீனங்கள் முறையாக மதிப்பீடு செய்வதற்கு உட்படுத்தாமல் வியாபார சூழலை அபிவிருத்தி செய்வதற்கும் அதற்காக உள்ள தடைகள் தொடர்பாகமுறையான மதிப்பீடொன்று மேற்கொள்ளப் படாமையால் நம்பிக்கை ெறுப்பின் நோக்கங்களை நிறைவேற்று வதற்காக பொருத்தமான தந்திரோபாயங்கள் இனங்காணப் பட்டிருக்கவில்லை. மேலும் தேவையான பிரகாரம் திட்டங்கள் நாளதுவரை யாக்கப்பட்டு எதிர்வரும் ஆண்டு களுக்காக கொண்டு செல்லக்கூடிய வகையில் கூட்டிணைந்த திட்டமொன்று தயாரித்து பணிப்பாளர் சபையினால் அங்கீகரித்துக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்வரும் ஆண்டிற்காக தொடர்ச்சியாக நடாத்திச் செல்லும் வகையில் கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டு முகாமைத்து சபையால் அங்கீகரிக்க வேண்டுமெனசுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும் |

### 4.3 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் செயல்நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல்நடவடிக்கை திட்டமொன்றை சமர்ப்பிப்பதற்காக பாரிய மூலதனச் செலவினமொன்று முகாமைத்துவ பொறுப்பினால் மேற்கொள்ளப்படு வதில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த செயல்நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

### 4.4 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| கணக்கீட்டு உத்தியோகத்தரால் நிதிப் பிரமாணம் 128 இன் பிரகாரம் முகாமைத்துவ பொறுப்பின் உள்ளக கணக்காய்வு பிரிவு தாபிக்கப்பட்டு முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டினை பலப்படுத்துவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் முகாமைத்துவ பொறுப்பின் உள்ளக கணக்காய்வு பிரிவு தாபிக்கப்பட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டினை பலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென |

### 4.5 பாதீட்டு கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2006 யூன் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4.1 ஆம் பந்தியின் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த பாதீடு தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டிற்காக பாதீடு தயாரிக்கப்பட்டு முகாமைத்துவ பொறுப்பிற்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த பாதீடு தயாரிக்கப்பட வேண்டுமென |

### 4.6 சுற்றாடல் சிக்கல்கள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) சுற்றாடலுக்கு பாதகமற்ற வகையில் மீன்கள் அல்லாத திண்மக் கழிவு பொருட்களை முகாமைத்துவம் செய்தல் கணக்காய்வு இடம்பெறும் திகதி வரை முறையாக மேற்கொள்ளப்படவில்லையென அவதானிக்கப்பட்டது. | மீன்கள் அல்லாத திண்மக் கழிவு பொருட்களை சுற்றாடலுக்கு பாதகமற்ற வகையில் மீள் சுழற்சி செய்வதற்காக புதிய தொழில்நுட்ப நடைமுறைகள் நிறுவனத்தினால் செயற்படுத்தப்பட்டுள்ளது | திண்மக் கழிவு பொருட்கள் முகாமைத்துவத்தின் போது சுற்றடாலுக்கு சேதங்கள் ஏற்படாத வகையில் முறைமையொன்று பின்பற்றப்பட வேண்டுமென |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பேலியாகொட மத்திய வியாபரச் சந்தை தொகுதிக்கு உரியதாக உருவாகியுள்ள சுற்றாடல் சிக்கல்கள் தொடர்பாக மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு அனுப்பிவைக்கப்பட்ட சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பம் 2014 மார்ச் 18 ஆந் திகதி சமர்ப்பிக்கப் பட்டிருந்த போதும் அதற்காக 5 ஆண்டுகள் கடந்திருந்த போதும் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |

## 4.7 நிலைபேறான அபிவிருத்தி

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகளின் அமைப்பினால் 2030 ஆம் ஆண்டு ஆண்டளவில் சகல நாடுகளின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதும் அதற்கு இணங்கும் வகையில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் இலக்குகள் மற்றும் குறிகாட்டிகள் இனங்காணப்படாமல் இருந்ததுடன் சரியான தரவுகளை பெற்றுக் கொள்ளல் மற்றும் பௌதீக வளங்களை முகாமைத்துவம் செய்யும் நடைமுறையொன்றும் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை. | நிலையான அபிவிருத்தி நிகழ்ச்சிநிரலுக்கு இணங்கும் வகையில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் இலக்குகள் மற்றும் குறிகாட்டிகள் இனங்காணப்பட்டு சரியான தரவுகளை மேற்கொள்ளல் மற்றும் பௌதீக வளங்கள் முகாமைத்துவம் செய்யும் நடைமுறைகளை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென |